

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் – மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் மீண்டும் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் – மருத்துவர் நா.எழிலன் ஆகியோர் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி.யிடம் வாழ்த்துப் பெற்றனர். உடன் பகுதிக் கழகச் செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி.,, பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.பரமசிவம், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணை செயலாளரும் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளருமான வே.கௌதமன், மற்றும் கழக முன்னணியினர் உள்ளனர்.



திருவல்லிக்கேணி பள்ளிவாசலில் மீண்டும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியின் வெற்றி வேட்பாளராக அறிவித்துள்ளதை முன்னிட்டு உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எஸ்.எச்.ரஹ்மத்துல்லா தலைமையில் வாக்கு சேகரித்தனர். பள்ளி முத்தவல்லி குலாம் அலி காதிரி வரவேற்று உதய சூரியன் சின்னத்திலே வாக்களிப்போம் என்று உறுதியளித்தார். உடன் பள்ளி நிர்வாகிகள் காதர் பாட்ஷா சமியுல்லா மற்றும் பள்ளி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# மாநிலங்களவையில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் கேள்வி!

4 ஆம் பக்கத் தொடர்ச்சி

அதிகரித்துக்கொண்டே வருகிறது.. அதன் வட்டிச் சுமை பட்ஜெட்டைச் இறுக்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய பல முக்கியமான ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி இன்னும் நிலுவையில் உள்ளது. தமிழ்நாடு அரசு அளித்துள்ள விரிவான விளக்கங்களின்படி, பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.10,000 கோடிக்கும் அதிகமான தொகையை ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டியுள்ளது.

ஜல் ஜீவன் திட்டத்தையே எடுத்துக்கொள்வோம். இத்திட்டத்திற்காக ஒன்றிய அரசு இது வரை ரூ.5,914 கோடி மட்டுமே வழங்கியுள்ளது.. இன்னும் ரூ.3,112 கோடி நிலுவையில் உள்ளது.

எங்களின் சட்டப்பூர்வமான நிதியை நீங்கள் மறுக்கும் போதெல்லாம், ஆளுநர் வழியாகத் தமிழ்நாட்டிற்கு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தும் போதெல்லாம், எங்கள் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எங்கள் மக்களுக்கு எப்போதும் சொல்வது ‘தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்! என்பதுதான்.

பல நிதி அறிவிப்புகள் வெறும் காகிதத்தோடு நின்றுவிடுகின்றன. உதாரணமாக, நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட ‘நகர்ப்புறத் திட்ட நிதியை’ எடுத்துக் கொள்ளுங்கள்.. அது அறிவிக்கப்பட்டு இன்று வரை தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட வந்து சேரவில்லை.

‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்!’

இன்று அதிகாரப் பலத்தால் கட்டுக்கதைகளை நீங்கள் கூறலாம். ரூ.10,000 கோடிக்கும் அதிகமான எங்களின் சட்டப்பூர்வமான நிதியை நீங்கள் நிறுத்தி வைக்கலாம், தரவுகளைத் திரித்துச் சொல்லலாம்.. டெல்லியிலிருந்து நிதி மேலாண்மை குறித்துப் பாடம் எடுக்கலாம். ஆனால், உங்களால் கட்டுப்படுத்த முடியாத ஒரு பெரும் சக்தி உண்டு அது தான் மக்கள் சக்தி!

இவை அனைத்தையும் தமிழ் நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒன்றிய அரசாங்கமானது தமிழ்நாட்டிற்கு எதுவுமே வழங்கவில்லை.. மாறாக புறக்கணித்துள்ளது.

என் வார்த்தையை குறித்து வைத்துக் கொள்ளுங்கள்..

நீங்கள் எங்களை எப்படி நடத்தினீர்களோ, அதே வழியில் தமிழ்நாட்டு மக்கள் ஏப்ரல் 23ஆம் தேதி அன்று உங்களுக்குப் பதிலடி கொடுப்பார்கள். மே 4 ஆம் தேதி முடிவுகள் வெளிவரும் போது, தமிழ்நாட்டு மக்கள் உங்களுக்கு எதிராக வழங்கிய தீர்ப்பை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

தமிழ்நாட்டு மக்களுக்கு இன்று ஒரே ஒரு முழக்கம் தான் தெரியும்: ‘ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. பேசினார்.

## ஓயா உழைப்பாளி முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும்!

# முதல்வரின் சாதனைகளை வீடு வீடாக எடுத்துக் கூறி வெற்றி காண்போம்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் அறிக்கை!

சென்னை, மார்ச் 30 –

தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒய்வின்றி உழைத்து வருகிறார். முதல்வரின் சாதனைகளை வீடு வீடாக எடுத்துக் கூறி திராவிட மாடல் ஆட்சி தொடர வெற்றிக் கனியை முதல்வரிடம் சமர்ப்பிப்போம் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள் ளார்.

அவரது அறிக்கை வருமாறு:–

நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் நாம் அனைவரும் சமம் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கப் பெற்று வேற்றுமைகள் கலைந்து அனைவரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே நமது அரசின் நோக்கம் என்றும் நீதி நிலை நாட்டப் பட வேண்டும் என்பதே இந்த ஆட்சி ஒரு சாட்சி.

வன்மம் மனதில் வைத்துக் கொண்டு தொடர்ந்து கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டு வருகிறார் மதபோதகர் பால் தினகரன் நடத்திய கூட்டத்தில் ஆர்எஸ் எஸ் இயக்கம் பல பிரிவுகளில் வழக்குகள் தொடர்ந்து கிறிஸ்துமஸ் அன்று கூட கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். ஒன்றிய அரசு மற்றும் கூட்டணி நண்பர்களின் பொய்யான முகத்தை இந்தத் தேர்தல் தோல் உரித்து காட்டும். விடுமுறை எடுக்காமல் சேயை செய்திருக்கிறார் என்று உண்மைக்கு மாறாக பேசி ஏமாற்றி வருகிறார்கள்.

எதிர்க்கட்சிகளின் விவாதத்திற்கு பதில் சொல்ல வேண்டும் என்று பயந்து பாராளுமன்றத்திற்கு வராத ஒரு பிரதமரை கொண்டிருக்கிறது நம் நாடு. மோடி தியாகத்தின் அடையாளம் என்று பொய் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.


நமது முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ஓய்வு என்பதே அறியாமல் மக்கள் நலன் கருதி உழைத்து வருகிறார். உழைப்பு உழைப்பு என்று ஒன்று தான் நமது முதலமைச்சர் அறிந்ததே!! எடப்பாடி பழனிசாமி சாத்தான்குளம் கொலை வழக்கில் கூட அடித்துக் கொல்லப்பட்டவர்களை மாரடைப்பு என்றும் மூச்சுத் திணறலில் இறந்தனர் என்றும் பொய் பேசி மக்களை திசை திருப்பினார்.

நமது முதலமைச்சர் வலியுறுத்தியதனால் 07.07.2020 சி.பி.சி.ஐ.டி. யிலிருந்து வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றி இன்று நீதி வென்றது. பொய்யர்களின் ஆட்டத்தை மக்கள் தன் வாக்குகள் மூலம் அடக்குவார்கள். தி.மு.க.வை வீழ்த்த வேண்டும் என்று நினைப்பவர்கள் வீழ்வார்கள். இது சரித்திர வெற்றி. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் பி.ஜே.பி., அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பது உறுதி.



முதலமைச்சர் செய்த அனைத்து சாதனைகளையும் கூறி பட்டி தொட்டி எங்கும் பிரச்சாரம் மேற்கொண்டு நமது திராவிட இயக்கம் சார்பில் வெற்றிக்கனியை முதலமைச்சரிடம் சமர்ப்பிப்போம்.

இவ்வாறு திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



காஞ்சிபுரத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் உத்திரமேரூர் க. சுந்தர் காஞ்சிபுரம் திருமதி நித்யா சுகுமார் ஆகியோர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரது திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில்

# 10 தொகுதிகளில் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர்கள்!

## விருத்தாச்சலம் – பிரேமலதா விஜயகாந்த், விருதுநகர் – விஜய பிரபாகரன் போட்டி!

சென்னை, மார்ச் 30 -

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் 10 தொகுதியில் தே.மு.தி.க. போட்டி யிடுகின்றன.

தே.மு.தி.க.வுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது. அதன்படி விருத்தாச்சலத்தில் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா,

விருதுநகர் தொகுதியில் விஜய பிரபாகரன்,

தருமபுரி - இளங்கோவன் ,

சேலம் மேற்கு அழகாபுரம் மோகன்ராஜ்,

ஓமலூர் ஏ.ஆர். இளங்கோவன்,

மயிலம் எல். வெங்கடேசன்,

பல்லாவரம் அனகை முருகேசன்,

திருத்தணி டி. கிருஷ்ணமூர்த்தி ,

குடியாத்தம் கே.பி. பிரதாப்,

போளூர் டிபி சரவணன்

- ஆகியோர் போட்டியிடுகின்றனர் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

## தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில்

# 5 தொகுதிகளில் போட்டியிடும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்கள்!

சென்னை, மார்ச் 30 -

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் 5 தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தமிழக சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகளில் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் திருத்துறைப்பூண்டி, தளி, பவானிசாகர், திருப்பூர் வடக்கு, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய தொகுதிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடுகிறது.

இந்த நிலையில் 5 தொகுதிகளில் போட்டியிடும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்கள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி,

தளி தொகுதியில் டி.ராமச்சந்திரன், திருத்துறைப்பூண்டி தொகுதியில் மாரிமுத்து, திருப்பூர் வடக்கு தொகுதியில் ரவி, பவானிசாகர் தொகுதியில் பிஎல் சுந்தரம், ஸ்ரீவில்லிப் புத்தூர் தொகுதியில் மகாலிங்கம் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

# எல்.பி.ஜி. தட்டுப்பாட்டால் பி.என்.ஜி.க்கு மாறும் மக்கள்!

புதுடெல்லி, மார்ச் 30 -

அமெரிக்கா, ஈரான் போர் காரணமாக நாடு முழுவதும் வணிக, வீட்டு உபயோக சமையல் காஸ் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண குழாய் வழி காஸுக்கு (பிஎன்ஜி) மாற வேண்டும் என்று மத்திய அரசு அண்மையில் அழைப்பு விடுத்தது.

தமிழகம், மகாராஷ்டிரா, டெல்லி, உத்தர பிரதேசம், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களின் பல்வேறு நகரங்களில் பிஎன்ஜி காஸுக்கான குழாய்கள் பதிக்கப்பட்டு உள்ளன.

எல்பிஜி சமையல் காஸ் சிலிண்டர் களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் இந்த நகரங்களில் குழாய் வழி பிஎன்ஜி காஸுக்கு பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் மாறி வருகின்றனர்.

கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும்போது எல்.பி.ஜி. சமையல் காஸ் கிடைக்கிறது. இது புரோப்பேன், பியூட்டேன் வாயுக்களின் கலவை ஆகும். இதற்கு மணம் கிடையாது.

ஆனால் எல்.பி.ஜி. கசிவை கண்டறிய ஈத்தைல் மெர்கேப்டன் என்ற வேதிப்பொருள் சேர்க்கப்படுகிறது.

இதன்மூலமே எல்.பி.ஜி. காஸ் கசிவை கண்டறிய முடிகிறது.

பிஎன்ஜி காஸ் என்பது இயற்கை எரிவாயு ஆகும். பெரும்பாலும் மீத்தேன் எரிவாயு ஆகும். நிலத்தடியில் உள்ள இயற்கை எரிவாயு கிணறுகளில் இருந்து மீத்தேன் பிரித்தெடு க்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு குழாய் மூலம் வீடுகள், ஆலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது சுமார் 50% பிஎன்ஜி காஸ் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது.

இதுகுறித்து பொதுத்துறை எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், “https://mypngd.in/ என்ற இணையதளத்தில் நுழைந்து உங்களது மொபைல் போன் எண் அல்லது எல்பிஜி இணைப்பு எண்ணை பதிவு செய்ய வேண்டும்.

பின்னர் சரண்டர் செய்வதற்கான விருப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் வீட்டில் இருந்தபடியே எளிதாக எல்.பி.ஜி. இணைப்பை துண்டிக்கலாம். இதர நடவடிக்கைகள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட ஏஜென்ஸிகளே மேற்கொள்ளும்” என கூறப்பட்டு உள்ளது.

# கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி போட்டியிடும் 2 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள்!

நாமக்கல், மார்ச் 30 -

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் 2 தொகுதியில் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி போட்டியிடுகின்றன.

கொங்கு மக்கள் தேசிய கட்சி சார்பில்போட்டியிடும் வேட்பாளர்களை அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன் அறிவித்துள்ளார்.

அதன்படி திருச்செங்கோடு தொகுதியில் ஈ.ஆர். ஈஸ்வரன் , பொள்ளாச்சி தொகுதியில் கே. நித்தியானந்தன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இவ்விருவரும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த அன்னமங்கலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளில் முதலிடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்வில் கல்லூரி நிறுவனர் அஞ்சாஞ்சேரி கணேசன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், கல்லூரி தலைவர் அரசு வழக்கறிஞர் கிருஷ்ணன், துணைத் தலைவர் வழக்கறிஞர் பரமசிவம், கல்லூரி முதல்வர் ஹரிகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.